**கிராமின் கிருஷி மவுசம் சேவா**
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 23-01-2024**

**புதுக்கோட்டை(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2024-01-23 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2024-01-24 | 2024-01-25 | 2024-01-26 | 2024-01-27 | 2024-01-28 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 31.0 | 32.0 | 32.0 | 32.0 | 32.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 21.0 | 22.0 | 22.0 | 22.0 | 22.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 90 | 90 | 90 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 50 | 50 | 50 | 40 | 40 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 10 | 10 | 12 | 18 | 16 |
| காற்றின் திசை (கோணம்) | 70 | 50 | 50 | 50 | 50 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 0 | 3 | 0 | 1 | 7 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

அடுத்த ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலைக்கு வாய்ப்பு உள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 31.0°C - 32.0°C வேறுபாட்டிலும் எனும் , குறைந்தபட்ச வெப்பநிலை 21.0°C - 22.0°C வேறுபாட்டிலும் இருக்கும். வானம் அடுத்த ஐந்து நாட்களுக்கு ஓரளவு மேகமூட்டமான வானம் எதிர்பார்க்கப்படுகிறது. காற்றின் வேகம் மணிக்கு 10 - 18 கிலோமீட்டர் வேகம் இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

## பொது ஆலோசனை:

தற்போது வளர் நிலையில் உள்ள அனைத்து விதமான பயிர்களுக்கும் ஊட்டச்சத்திற்காக நேனோ யூரியா கொண்டு ஒவ்வொரு பயிர்க்கும் பரிந்துரைக்கப்பட்ட அளவு நேனோ யூரியா தெளிக்க வேண்டும்.

## குறுஞ்செய்தி :

கால்நடைகளுக்கு தேவையான பசுந்தீவனத்தை வருகின்ற கோடை காலத்தில் பயன் படுத்த ஊறுகாய் புல்லாக மாற்றி சேமித்துவைக்க வேண்டும்.

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நிலக்கடலை | தொடர்ந்து வறண்ட வானிலை காரணமாக கார்த்திகை பட்டத்தில் விதைத்த நிலக்கடலை பயிரில் அசுவினி தாக்க வாய்ப்பு உள்ளது . விவசாயிகள் வயலை நன்கு கண்காணித்து தாக்குதல் காணப்பட்டால் ஒரு லிட்டர் தண்ணீருக்கு |

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| | இமிடாகுளோபிரிட் 0.4 மில்லி என்ற அளவில் கலந்து தெளிக்கவும். |
| மக்காச்சோளம் | தை பட்டம் மக்காசோளம் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் கதிர் அரும்பும் தருணத்தில் 3 கிலோ தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் மக்காச்சோள மேக்சிம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து இலைத் தெளிப்பாக தெளிப்பதன் மூலம் கதிர் அதிகம் பிடிக்கும். மகசூல் அதிகரிக்கிறது மற்றும் வறட்சியை தாங்கும் தன்மை ஏற்படுகிறது. |
| உளுந்து | உளுந்து சாகுபடி செய்யத்து உள்ள விவசாயிகள் பூக்கும் பருவம் 35 நாள் வயது உடையாய் உளுந்து பயிருக்கு இலைவழி தெளிப்பாக TNAU பயறு ஒன்டரை ஏக்கருக்கு 2 கிலோ விகிதம் பூ பூக்கத் தொடங்கும் பருவத்தில் அளிப்பதன் மூலம் பூ உதிர்தல் குறைந்து , அதிக மகசூல் மற்றும் வறட்சி தாங்கி வளரும் . |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வாழை | வாழை நடவு செய்யவுள்ள விவசாயிகள் களையை கட்டுப்படுத்தி ஈரத்தன்மையை தக்க வைக்க வாழை நடவு செய்யும் போது இடையேயுள்ள இடைவெளியில் தட்டைப்பயிரை ஊடுபயிராக பயிர் செய்ய வேண்டும். |
| வாழை | வாழையில் அனைத்து பருவத்திலும் பனாமா வாடல் நோய் காணப்படும் . தாக்குதலின் அறிகுறிகள்: முதலில், அடிப்புற இலைகளில் குறிப்பாக இலை ஓரங்களில், மஞ்சள் நிற மாற்றம் மற்றும் வாடிக் காணப்படும். பின்பு இந்த மஞ்சள் நிறம், இலையின் மையப்பகுதி வரை பரவி, ஓரங்கள் காய்ந்து போகும். கட்டுப்படுத்தும் முறை : கார்பன்டாசிம் 50 மில்லி காப்ஸ்யூல் அல்லது 2 சதவீதம் கார்பன்டசிம் ஊசியின் மூலமாக இடவேண்டும். அல்லது வேப்பம் புண்ணாக்கு கலந்து இடலாம் . |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| ஒட்டகம் | ஆடு மாடுகளில் நத்தைகள் மூலம் பரவும் தட்டைப்புழு நோய்களை கட்டுப்படுத்துத்தல்: தை , மாசி மற்றும் பங்குனி மாதங்களில் நீர் நிர்லைகள் உள்ள பகுதிகளுக்கு மேயச் செல்லும் ஆடு மாடுகளுக்கு (குறிப்பாக இளம் கால்நடைகள்) நத்தைகள் மூலம் பரவும் தட்டைப்புழுக்களின் தாக்கம் காணப்படும். பாதிக்கப்பட்ட கால்நடைகளில் கழிச்சல், இரத்த சோகை , கீழ்த்தாடை வீக்வீகம், அடிக்கடி தண்ணீர்ணீகுடித்தல் மற்றும் மாடுகளில் வயிறு உப்புசம் போன்ற அறிகுறிகள் காணப்படும். தட்டைப்புழுக்களின் தாக்கத்தை கண்டறிய சாணப் பரிசோதனை செய்து, கால்நடை மருத்துத்வரின் ஆலோசனைப்படி குடற்புழு நீக்கம் செய்யலாம். மேலும் இப்புழுக்களின் தாக்கத்தை கட்டுப்படுத்த கால்நடைகளை நீர் நிலைகளுள்ள பகுதிகளுக்கு மேய்ச்சச்லுக்கு அனுப்பக்கூடாது. |
| பசு | குறைந்தபட்ச வெப்பநிலை 20°C க்கும் குறைவாக இருப்பதனால் பசுக்களுக்கு போதிய பசுந்தீவனங்கள் மற்றும் கலப்பு தீவனங்களை கொடுப்பதனால் பால் உற்பத்தி குறையாமல் பாதுகாக்கலாம். குறைந்தபட்ச வெப்பநிலையால் இளம் கால்நடைகளும் கோழிக்குஞ்சுகளும் பாதிக்கபடாமலிருக்க ஜன்னல் மற்றும் கதவுகளில் காய்ந்த சணல் சாக்குகளைத் தொங்க விடவும் |

## கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை:

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| சேவல் | ஜனவரி மாதத்தின் கடைசி வாரத்தில் இரவு வெப்பம் குறைந்தும், பகல் வெப்பம் சற்று உயாந்தும் காணப்பட்டுட் , பின் பனிக்காலமாக நிலவும். பின்பனிக்காலத்தில் வெப்ப அளவுகள் உயர்வர் தும், குறைவதும் மாறி மாறி காணப்படுவது இயல்பே. இவ்வானிலையில், கோழிகள் மற்றும் கறவை மாடுகள் அயற்சியினால் பாதிக்கப்படுவதும் இயல்பே. கோழிகளில் அதிக தீவன எடுப்பு, முட்டை ட் உற்பத்தி குறைபாடு ஆகியவையையும், மாடுகளில் பால் உற்பத்தி குறைந்து, கொழுப்பு குறைவதும் காணப்படும். கோழிகளுக்கான தீவனத்தில் தாவர எண்ணெய் டன்னிற்கு 5 கிலோ சேர்ப்ர் ப் தும் கறவை மாடுகளின் கொட்டட் கை யை குளிர்ந்ர் ந்த காற்றின் பாதிப்பு இல்லாமல் படுதாவை கொண்டு தடுக்க வேண்டும். |

**பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை:**

| பிற ( மண்/ நில தயாரிப்பு) | பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பொது ஆலோசனை | தொடர்ந்து வறண்ட வானிலை காணப்படுவதால் வேளாண் பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ள விவசாயிகள் பாசன நீர் பற்றாக்குறை உள்ள இடங்களில் வேளாண் பயிர்கள் வறட்சி தங்கி வளர ஏக்கருக்கு 200 மி.லி மித்தைலோ பாக்டிரியம் கரைசல் அல்லது 0.5 % பொட்டாசியம் குளோரைடு கரைசலைக் கொண்டு 15-20 தெளிப்பு செய்ய வேண்டும். |